# தடம்

# THADAM

யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி

J/CHAVAKACHCHERI HINDU COLLEGE CHAVAKACHCHERI Sep. - Dec. 2012 VOLUME 5 ISSUE 3

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



தென்மராட்சிக் கல்வி வலயத்தில் 1999 ஆம் ஆண்டிலிருந்து எமது மாணவர்களின் கல்வி உயர்வுக்காய் பல பதவி நிலைகளில் அரும் பணியாற் றிய எமது கல்விப் பணிப்பாளர் பெருமதிப்பிற் குரிய திரு.கு.பிறேமகாந்தன் அவர்களின் சேவையை நன்றியுடன் நினைவுகூர்ந்து மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றமையினைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

## வரவேற்கின்றோம்.



தென்மராட்சிக் கல்வி வலயத்தின் கல்வி நிலையை மேலும் உயர்த்த வேண்டும் என்ற உறுதியோடு வருகை தந்திருக்கும் எமது பெரு மதிப்பிற்குரிய கல்விப் பணிப்பாளர் திரு.க.கிருஷ்ணகுமார் அவர்களை மிக்க மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றோம்.

## முதன்மை சஞ்சிகை வெளியீடு



எமது கல்லூரி மாணவ முதல்வர்களால் வெளியிடப்படும் முதன்மை சஞ்சிகை வெளியீட்டு விழா கடந்த 05.12.2012 அன்று காலை கல்லூரிப் பிரதான மண்டபத்தில் சிரேஷ்ட மாணவ தலைவன் செல்வன்.நா.பானுகோபன் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவிற்குப் பிரதமவிருந்தினராக வைத்திய காலாநிதி குகதாஸன் (சாவகச்சேரி வைத்தியசாலை பிரதம அத்தியட்சகர்) அவர்கள் கலந்து சிறப்பித்தார். முதன்மை சஞ்சிகை வெளியீட்டுரையை நிகழ்த்துவதற் காக சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் திரு.க.அருந்தவபாலன் அவர்கள் வருகை தந்து சிறப்பித்தார். சிறப்பு விருந்தினராக எமது கல்லூரிப் பழைய மாணவனும், பழைய மாணவர் சங்க கொழும்பு கிளையின் செயலாளரும், தொழில் அதிபருமாகிய திரு.நா.மயூரன் அவர்கள் கலந்து சிறப்பித்தார்.

எமது கல்லூரி அதிபர் திரு.அ.கயிலாயபிள்ளை அவர்கள் உரையாற்றும் போது ஒழுக்காற்றுச் சபை பொறுப்பாசிரியர்களதும், மாணவ முதல்வர்களினதும் ஒன்றுபட்ட உழைப்பின் வெளிப்பாடே முதன்மை என்று குறிப்பிட்டதுடன் பொறுப்பாசிரியர் களது பணியையும், மாணவ தலைவர்களது முயற்சியையும் பாராட்டினார்.

பிரதம விருந்தினர் அவர்கள் தமது உரையிலே கல்லூரிக்காலங்களை நினைவுகூர்ந்ததுடன்

பாடசாலைச் சுற்றாடலைப் பேணுவதிலும் மாணவர் தலைவர்கள் குழுவாக இணைந்து சிறப்புறப் பணியாற்றுதல் வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

முதன்மை சஞ்சிகைகையைப் பிரதமவிருந்தினர் வைத்தியகலாநிதி குகதாஸன் அவரக்ள் வெளியிட்டு வைக்க அதன் முதற்பிரதியை திரு.நா.மயூரன் அவர்கள் பெற்றுக் கொண்டார். முதன்மை சஞ்சிகை வெளியீட்டுரை நிகழ்த்திய சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் அவரக்ள் தமது உரையிலே முதன்மை சஞ்சிகை சிறந்த முறையிலே வடிவமைக்கப்பட்டு ஒழுங்கு பெற மாணவர்களால் ஆக்கப்பட்டுள்ள தென்றும். ஒவ்வொரு மாணவரும் இத்தகைய சஞ்சிகை ஆக்கங்களை வாசிப்பதன் மூலம் தம் தலைமைத்துவப் பண்புகளை விருத்தி செய்து கொள்ள வேண்டியதன் அவசியம் பற்றியும் குறிப்பிட்டார்.



திரு.நா.மயூரன் அவர்களும் பொறுப்பாசிரியரும் பிரதி அதிபருமாகிய திரு.ந.பாலச்சந்திரன் ஆகியோர் உரை நிகழ்த்தினர். பகுதித்தலைவர்கள், பாட இணைப்பாளர்கள், ஆசிரிய சகோதரத்துவப் பிரதிநிதிகள், பழைய மாணவர் சங்கப் பிரதிநிதிகள், பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள் கூட்டுறவுச் சிக்கனக் கடனுதவிச் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோரும் பெற்றுக் கொண்டனர்.

சிரேஷ்ட மாணவ தலைவி செல்வி.ச.சஜித்தாவின் வரவேற்புரையுடன் ஆரம்பமான இந்நிகழ்வு, மாணவ தலைவன் செல்வன்.த.செந்தாளனின் நன்றியுரையுடன் நிறைவுபெற்றது.

## ஆசிரியர் தினம் - 2012

எமது கல்லூரி ஆசியர் தினம் 05.10.2012 அன்று கல்லூரிப் பிரதான மண்டபத்தில் பாடசாலைப் பழைய மாணவர் சங்கத் தலைவர் திரு.யோ.ஜெயக்குமார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கல்லூரிப் பழைய மாணவர் சங்கமும், பாடசாலை அபிவிருத்திச் சங்கமும், கல்லூரி மாணவ முதல்வர்களும் இணைந்து ஒழுங்கு செய்திருந்த இவ்விழாவிற்கு தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு.ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.



மாணவர்கள் பாமாலைகளாலும் பூமாலைகளாலும் ஆசிரியர்களைப் போற்றிப் பாராட்டினர். அடுத்த ஆசிரியர் தனித்திகு முன்னர் ஓய்வு பெறவுள்ள



திருமதி.செ.செல்வராசா (பிரதி அதிபர்), திருமதி.இ.சுப்பிரமணியம் (இசை ஆசிரியர்) ஆகியோருக்கு நினைவுச் சின்னம் வழங்கிப் பிரதம விருந்தினர் அவர்கள் கௌரவித்தார். ஆசிரியர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. "மகத்தான சேவை என மதிக்கப்பட வேண்டுமானால் ஆசிரியர் எத்தகைய சேயையாற்ற வேண்டும்" என்ற தொனிப் பொருளில் பிரதம விருந்தினர் உரையாற்றினார். கல்லூரி முதல்வர் ஆசிரியர்களை வாழ்த்தி உரையாற்றினார். மேலும், வலயக் கல்விப் அலுவலகக் கணக்காளர் திரு.செந்தூரன், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர், பழைய மாணவர் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் இந்நிகழ்விற்கு வருகை தந்து சிறப்பித்தனர்.

### சிவகோசாரியார் நினைவுப் போட்டி

முன்னை நாள் உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் அமரர் சிகோசாரியார் அவர்களது ஞாபகார்த்த உதைபந்தாட்டப் போட்டி எமது கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. தென்மராட்சி வலயப் பாடசாலைகளுக் கிடையே நடைபெற்ற இப்போட்டியில் எமது கல்லூரியைச் சேர்ந்த 14 வயதுப் பிரிவு உதைபந்தாட்ட ஆண், பெண் இரு அணியினரும் பங்குபற்றி வெற்றி பெற்றனர்.

அன்றைய தினம் வலய மட்டத்தில் நடைபெற்ற 16 வயது ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் எமது கல்லூரி அணியினர் முதலிடம் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

### தேசிய வாசிப்பு மாதப் போட்டி - 2012

சாவகச்சேரி நகரசபையினரால் நடத்தப்பட்ட தேசிய வாசிப்பு மாதத்தையொட்டிய போட்டிகளில் எமது கல்லூரி மாணவர்கள் பங்குபற்றி வெற்றி பெற்றுள்ளனர்.

**மத்திய பிரிவு கட்டுரை (தமிழ்)**

| | | |
|---|---|---|
| தரம் 7 | சி.டனுஜன் | 2ஆம் இடம் |

**மேற்பிரிவு**

| | | |
|---|---|---|
| தரம் 11 | ஆ.அஜித்தா | 1ஆம் இடம் |
| தரம் 11 | ம.விஜிகரன் | 3ஆம் இடம் |

**அதிமேற்பிரிவு**

| | | |
|---|---|---|
| தரம் 12 | நா.கோதண்யா | 1ஆம் இடம் |

**மத்திய பிரிவு ஆங்கில மொழிமூலம்**

| | | |
|---|---|---|
| தரம் 9 | வி.மதனிகா | 1ஆம் இடம் |
| தரம் 9 | ம.கீதானந்த் | 3ஆம் இடம் |

**மேற்பிரிவு**

| | | |
|---|---|---|
| தரம் 10 | சி.கிருஷிகா | 1ஆம் இடம் |
| தரம் 12 | ஸ்ரீ.கிரீடி | 2ஆம் இடம் |
| தரம் 12 | கு.கபிலன் | 3ஆம் இடம் |

**மத்திய பிரிவு செய்தி வாசித்தல்**

| | | |
|---|---|---|
| தரம் 7 | சி.தனுசியா | 1ஆம் இடம் |
| தரம் 9 | அ.நேதிகா | 2ஆம் இடம் |

**மேற்பிரிவு**

| | | |
|---|---|---|
| தரம் 13 | எஸ்.சாஜீசன் | 1ஆம் இடம் |
| தரம் 11 | த.பிரகாஷ் | 2ஆம் இடம் |

வெற்றிபெற்ற மாணவர்களையும், வழிப்படுத்திய ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம்.

**தேசியமட்ட புத்தாக்குநர் கண்காட்சி – 2012**


U.சங்கவி


M.கங்காதீபன்


G.பவித்திரன்


T.சானுசன்



எஸ்.யோகீசன்


S.ஜோதிகா

T.அமிர்தவர்சனி

தேசிய மட்ட புத்தாக்குநர் கண்காட்சியில் பங்கு பற்றிய இம்மாணவர்களையும், இவர்களை நெறிப் படுத்திய ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம். பொறுப்பாசிரியர் திரு.க.உதயசந்தர் அவர்களின் நெறிப்படுத்தலில் இம்மாணவர்கள் கொழும்பில் நடைபெற்ற கண்காட்சியில் பங்குபற்றினர்.

**தேசிய மட்டத்தில் வெற்றி பெற்றோர்**


நா.கோதண்ஜா


த.லதீசனா

கொழும்பு பல்கலைக்கழக தமிழ்ச சங்கம் நடத்திய எழுத்தாக்கப் போட்டியில் எமது கல்லூரியைச் சேர்ந்த தயாபரன் லதீசனா (கீழ்ப்பிரிவு) தேசிய நிலையில் இரண்டாமிடத்தையும், நாகேந்திரன் கோதண்யா (மேற்பிரிவு) மூன்றாமிடத்தையும் பெற்றனர். இவர்களுக் கான பரிசிலும், சான்றிதழும் வழங்கும் நிகழ்வு வெள்ளவத்தை ராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் 14.10.2012 அன்று நடைபெற்றது. கல்லூரிக்குப் புகழ் சேர்த்த இந்த மாணவர்களையும் நெறிப்படுத்திய ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம்.

**பெண்களுக்கெதிரான துஷ்பிரயோகங்களை ஒழிப்போம் சித்திரப் போட்டி**

பிரதேச செயலகங்களுடாக மாவட்ட நிலையில் நடத்தப்பட்ட சித்திரப் போடடியில் எமது கல்லூரி மாணவர்களான ம.கீதானந்த் - தரம் 10A, ம.கீதாஞ்சலி j uk ; 6D ஆகிய இருவரும் மாவட்ட நிலையில் முறையே 3 ஆம் இடத்தையும் ஆறாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர். “பெண்களுக்கெதிரான வன் முறைகளை ஒழிப்போம்” என்ற கருப்பொருளில் அமைந்த இப்போட்டியின் பரிசளிப்பு வைபவம் யாழ் கலைக்கோட்டத்திலே கடந்த 24.12.2012 அன்று நடைபெற்றது.

**கண்ணிவெடி விழிப்புணர்வு கட்டுரைப் போட்டி 2011**

| | | | |
|---|---|---|---|
| பிரிவு II | கு.கௌசிகா | 2ஆம் இடம் |
| பிரிவு III | யோ.நிசாங்கி | 3ஆம் இடம் |
| | இ.ஆராதனா | 2ஆம் இடம் |
| பிரிவு IV | சி.சோபிதா | 1ஆம் இடம் |

இந்த மாணவர்களையும், பயிற்றுவித்த ஆசிரியர் களையும் பாராட்டுகின்றோம்.

**பசுமை அமைதி விருது – 2011**



முருகதாஸ் மயூரன் பசுமை அமைதி விருது பெற்றுள்ளார். இவரைப் பாராட் டுகின்றோம்.

**வாசிப்பு மாதப் போட்டி - 2012**

(பாடசாலை மட்டம்)

**பொது அறிவுப் போட்டி**

பிரிவு I

| | |
|---|---|
| செ.இளங்கதிர் (6B) | 1ஆம் இடம் |
| சி.டர்சிஜன் (7A) | 2ஆம் இடம் |
| வி.மிதுசன் (7A) | 2ஆம் இடம் |

பிரிவு II

| | |
|---|---|
| ஜெ.பிரியங்கா (9D) | 1ஆம் இடம் |
| சி.சோபனா (9D) | 2ஆம் இடம் |
| எஸ்.மதுஷா (9D) | 2ஆம் இடம் |

பிரிவு III

| | |
|---|---|
| ப.சஜீபனா (11E) | 1ஆம் இடம் |

ஸ்ரீ.கஜேந்தினி2ஆம் இடம்
கு.கௌசிகா 3ஆம் இடம்
பிரிவு IV
எஸ்.உஷானி (12M1) 1ஆம் இடம்
மு.கிருத்திகா (13A1) 2ஆம் இடம்
க.சுகிர்னா (13A1) 3ஆம் இடம்

**கட்டுரை**
பிரிவு I
ம.கீதாஞ்சலி (6D) 1ஆம் இடம்
த.தரணிகா (7D) 2ஆம் இடம்
ஜெ.ஜெனனிதா (7D) 3ஆம் இடம்
பிரிவு II
த.லதிசனா 1ஆம் இடம்
ஏ.நேதிகா 2ஆம் இடம்
மு.பானுஜன் 2ஆம் இடம்
பிரிவு III
வ.ஜெனனி (11E) 1ஆம் இடம்
ம.தாரணி (11) 2ஆம் இடம்
ஆ.அஜித்தா (11E) 3ஆம் இடம்
பிரிவு IV
ஆ.பானுஷா (13A4) 1ஆம் இடம்
ப.நிதர்ஷன் (13A3) 2ஆம் இடம்
இ.தனேஸ்குமார் (13A3) 3ஆம் இடம்

**கவிதை**
பிரிவு III
சி.தருஷாலினி (10E) 1ஆம் இடம்
து.யதுர்ஷன் (10B) 2ஆம் இடம்

பிரிவு IV
தி.ஆரணி (12M1) 1ஆம் இடம்
பி.பிறேமிஷா (12M1) 2ஆம் இடம்
த.தர்ஷிகா (12A2) 3ஆம் இடம்

**நூல் விமர்சனம்**
பிரிவு III
ந.நிரோஷாந் (10A) 1ஆம் இடம்
த.சங்கீத் (10A) 2ஆம் இடம்
இ.கஜந்தன் (10A) 3ஆம் இடம்
பிரிவு IV
பி.பிறேமிஷா (12M1) 1ஆம் இடம்
ப.நிதர்சன் (13A3) 2ஆம் இடம்
கி.நிக்ஷன் (13A3) 3ஆம் இடம்

இப்போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்களையும், நெறிப்படுத்திய ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம்.

**வாணி விழாவும் கலைநிகழ்வும்**

வழமை போல இம்முறையும் வாணிவிழா நிகழ்வுகள் சிறப்புற இடம்பெற்றன. ஒன்பது தினங்களும் விசேட பூசையும், ஆராதனையும், மாணவர்களதும், ஆசிரியர்களதும் நற்சிந்தனையும் இடம்பெற்றன. நவராத்திரியை முன்னிட்டு நடத்தப்பட்ட கோலப் போட்டி, மாலை கட்டல் போட்டி, சமய அறிவுப் போட்டி என்பற்றில் பரிசு பெற்ற மாணவர்க்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இந்து மன்றப் பொறுப்பாசிரியர் திரு.ப.ஜெகசீலன் ஆசிரியரால் இந்நிகழ்வுக்ள நெறிப்படுத்தப்பட்டன.

**கொழும்பு தமிழ்ச் சங்கம் நடத்திய போட்டிகளில் மவாட்ட நிலையில் வெற்றி பெற்ற மாணவர் விபரம்**

**கட்டுரை – கீழ்ப்பிரிவு**
தயாபாரன் லதீசனா 1ஆம் இடம்
மேற்பிரிவு
நாகேந்திரன் கோதண்யா 1ஆம் இடம்
சிறுகதை
பிறேமானந்தன் லக்ஷியா 1ஆம் இடம்
**கவிதை – மத்திய பிரிவு**
திருச்செல்வம் நவலாஜினி 1ஆம் இடம்
மேற்பிரிவு
பிறேமானந்தன் பிறேமிஷா 2ஆம் இடம்
இவர்களைப் பாராட்டுகின்றோம்.

**வலய மட்ட சமூக விஞ்ஞான பொது அறிவுப் போட்டி - 2012**

தரம் 6
சு.ஆருஷன் 3ஆம் இடம்
தரம் 7
எஸ்.டனஜன் 1ஆம் இடம்
அ.கீர்த்தனன் 3ஆம் இடம்
தரம் 8
மு.கம்சிகா 2ஆம் இடம்
தரம் 9
இ.விஹானி 2ஆம் இடம்
வி.மதனிகா 3ஆம் இடம்
தரம் 10
செ.சாரங்கன் 1ஆம் இடம்
தரம் 11
ஆ.மயூரன் 2ஆம் இடம்
பி.லக்ஷியா 3ஆம் இடம்

**கணினிசார் கண்காட்சி**

IDM கணினி நிறுவத்தினர் நடத்திய கண்காட்சியில் வெற்றி பெற்ற மணாவர் விபரம்
முதன்மை நிலை எஸ்.சோபனா
ஜெ.ஜெயகீதன்
ஆறுதல் பரிசுகள் ஜெ.ஜெயதாரணி
வ.சஞ்சயன்
இவர்களைப் பாரட்டுகின்றோம்.

**சைவபரிபாலன சபை பரீட்சையில் பரிசு பெற்றோர்**
வா.சசிந்தா தரம் 12 (சமயம்) 2ஆம் இடம்

| | | |
|---|---|---|
| சி.கார்த்திகா | தரம் 9 (சமயம்) | 3ஆம் இடம் |
| ம.பவதாரணி | தரம் 12 (தமிழ்) | 2ஆம் இடம் |
| த.பானுஜா | தரம் 13 (தமிழ்) | 3ஆம் இடம் |

**ஆறுதல் பரிசு பெற்றோர்**

| | |
|---|---|
| க.அச்சுதன் | தரம் 6 (தமிழ்) |
| ஜெ.பானுஜா | தரம் 6 (சமயம்) |
| க.நிதிலா | தரம் 7 (தமிழ்) |
| கு.கௌசிகா | தரம் 9 (சமயம்) |
| நா.கோதண்யா | தரம் 11 (சமயம்) |

இப்போட்டியில் பங்குபற்றிய மாணவர்களையும் நெறிப்படுத்திய ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம்.

### கருவும் காட்சியும் சித்திரப்போட்டி XVI

**போட்டி இலக்கம் XVI 2012/9**

பிரிவு 01

| | | | |
|---|---|---|---|
| து.யதுர்சன் | 6B | ப.மயூரன் | 7A |
| செ.இளங்கதிர் | 6B | கி.பிருந்தன் | 6B |

பிரிவு 02

| | | | |
|---|---|---|---|
| ஆ.நிஜாநந் | 8B | ம.கீதாநந் | 9B |
| ம.சுபேஷ்சர்மா | 9C | N.நிருபா | 9D |

பிரிவு 03

| | |
|---|---|
| அ.சோபிகன் | கு.மகிழ்நன் |
| சு.ராகவன் | சி.சிவஜன் |

பிரிவு 04

| | |
|---|---|
| மோ.பிரசாந் | ப.பபிராஜ் |
| வி.நயனன் | |

### கருவும் காட்சியும் XVII.2012/6

பிரிவு I

| | | |
|---|---|---|
| செ.இளங்கதிர் | 6B | 1ஆம் இடம் |
| கு.லக்ஷன் | 6C | 2ஆம் இடம் |
| தி.பானுஜன் | 6B | 3ஆம் இடம் |


பிரிவு II

| | | |
|---|---|---|
| ஆ.ஷாறுபன் | 8B | 1ஆம் இடம் |
| ஆ.நிஜானந் | 8B | 2ஆம் இடம் |
| ந.வர்ணராஜ் | 9A | 3ஆம் இடம் |


பிரிவு IV

| | | |
|---|---|---|
| யோ.பிரசாந் | 13 | 1ஆம் இடம் |
| பா.பபிராஜ் | 13 | 2ஆம் இடம் |
| வி.நயனன் | 12 | 3ஆம் இடம் |
| யோ.நிசாந்தன் | 12 | 3ஆம் இடம் |

### சர்வதேசக் கூட்டுறவு தின விழா - 2012



செ.இளங்கதிர்



ச.சங்கர்ஜி

கூட்டுறவு தினப் போட்டியில் பங்குபற்றி மாவட்ட நிலையில் வெற்றி பெற்ற மாணவர் விபரம்

| | | |
|---|---|---|
| தரம் 6 | செ.இளங்கதிர் | 1ஆம் இடம் |
| தரம் 9 | ச.சங்கர்ஜி | 2ஆம் இடம் |

இவர்களுக்கான பரிசில் நிகழ்வு 05.12.2012 யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இம்மாணவர்களைப் பாராட்டுகின்றோம்.

### பாட மேம்பாடு

தரம் 11 மாணவர்களுக்கான பாட மேம்பாட்டுத் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன. தினமும் காலை 7 மணி தொடக்கம் 8 மணி வரையும், மாலை 2 மணி தொடக்கம் 3 மணிவரையும் நேரசூசியின் படி பாடங்கள் நடைபெறுகின்றன. மாணவர்களின் சித்தி வீதத்தை அதிகரிப்பதே இதன் முக்கிய நோக்கமாகவுள்ளது.

### சேவையைப் போற்றுகின்றோம்



எமது கல்லூரியில் கடந்த 22 வருடங்களாக வர்த்தகமும் கணக்கியலும் பாடத்தைக் கற்பித்து இவ்வருடம் ஓய்வு பெற்றவர் திரு.த.பாலகிருஷ்ணன் ஆசிரியர் அவர்கள் மாணவர் உள்ளத் தேவையறிந்து போதிப்பதில் சிறந்து விளங்கியவர். க.பொ.த உ/த வர்த்தகப் பிரிவு மாணவர்கள் பலர் சிறந்த முறையில் சித்தி பெற்று பல்கலைக்கழகம் செல்வதற்குக் காரணகர்த்தராய் விளங்கியவர். தன்னால் இயன்ற வரையும் மாணவர்க்கு கல்வி கற்பிப்பதிலேயே நேரத்தைச் செலவிட்டவர். அனைவருடனும் நட்புறவுடன் பழகுவதிலும் ஆலோசனை பகர்வதிலும் சிறந்து விளங்கியவர். க.பொ.த சா/தர மாணவர்களும் வர்த்தக பாடத்தை விரும்பிக் கற்பதற்கு வழிவகுத்தவர்.

இவரது சேவைக்காலத்தின் பெரும்பகுதி எமது கல்லூரியிலேயே மாணவர் கல்வி முன்னேற்றத்திற்காகப் பயன்பட்டுள்ளது. ஆசிரியர் அவர்கள் ஓய்வு பெறுவது எமது கல்லூரிக்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும். தனக்கெனத் தனித்துவமான முறையிலே கற்பிக்கின்ற சிறந்த ஆசிரியர். ஒழுக்காற்றுச் சபையிலே உறுப்பினராக இருந்து மாணவர் ஒழுக்கத்தை பேணுவதில் சிறப்பாகப் பணியாற்றியவர். அவரது ஓய்வுகாலம் சிறப்புற அமையவும், குடும்பத்தினருடன் மகிழ்வாக வாழவும் இறைவனை இறைஞ்சுகின்றோம்.

### இந்துவில் சரஸ்வதியின் அருளாட்சி



எமது கல்லூரியின் சித்தி பாட ஆசிரியர் திரு செ.செல்வரமணன் அவர்களால் மிக்க அழகுடனும், பொழவுடனும் அற்புதமாக பிரதான மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள சரஸ்வதி உருவப்படம் கடந்த 07.12.2012 அன்று திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது. அதிபர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தென்மராட்சி வலயக் கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு.ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி அவர்கள் உருவப்படத்தை திரைநிக்கம் செய்து வைத்தார். உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு.எஸ்.சிவகுமார், கோட்டக் கல்வி அலுவலர் திரு.கு.சிவானந்தம் சித்திரபாட ஆசிரிய ஆலோசகர் திரு.நா.இராஜன் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். ஆசிரியர் இரவு பகல் பாராது, பசிநோக்காது, கண்துஞ்சாது அர்ப்பணிப்புடன் இந்தத் தெய்வீகப் பணியைச் செய்துள்ளமை பாராட்டப்பட வேண்டியது என அதிபர் அவர்கள் தமது உரையிலே குறிப்பிட்டார். திரு.செ.செல்வரமணனின் இந்த அற்புதமான படைப்பு அவருடைய அர்ப்பணிப்பான உளப்பாங்கினையும், மகத்தான ஆசிரியப் பணியையும் எடுத்தக் காட்டுவதாக அமைந்துள்ளது என உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு.ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி அவர்கள் உரையாற்றும் போது குறிப்பிட்டார். ஆசிரியர் அவர்கள் பொன்னாடை போர்த்தி பொற்கிழி வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இந்த சரஸ்வதி ஓவியத்தை வரைவதற்கு தான் எடுத்தக் கொண்ட சிரமங்களையும், இது ஒரு தெய்வீகப் பணி என்பதையும் குறிப்பிட்டு திரு.செ.செல்வரமணன் அவர்கள் உரையாற்றினார்.

ஏனைய ஆசிரியர்களுக்கு முன்மாதிரியாகச் செயற்பட்டு இந்த அற்புதமான அர்ப்பணிப்பான பணியைச் செய்து இந்துவிலே சரஸ்வதியின் அருளாட்சி என்றும் சிறப்புறக் கிடைக்கத் துணை செய்த ஆசிரியர் திரு.செ.செல்வரமணன் அவர்களை தடம் செய்தியேட்டினூடாக வாழ்த்துவதில் நாமும் பெரு மகிழ்வடைகின்றோம்.



செலிங்கோ நிறுவனத்தினர் எமது கல்லூரிக்கென Over head Projector ஒன்றை வழங்கியுள்ளனர். சாவகச்சேரி கிளை முகாமையாளர் திரு.கே.பிரதீபன் அவர்கள் இதனை கல்லூரி முதல்வரிடம் கையளித்தார். நவீன வசதிகளுடன் எமது கல்லூரி மாணவர்கள் கல்வியைப் பெற வேண்டும் என்ற அவர்களது நல்லநோக்கினை நாம் நன்றியுடன் பாராட்டுகின்றோம்.

தடம் வெளியீடு



எமது கல்லூரித் தடங்களைத் தன்னகத்தே தாங்கிவரும் தடம் செய்தியேடு வெளியீட்டு நிகழ்வு கல்லூரி முதல்வர் தலைமையில் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த ஆண்டுக்கான இரண்டாவது தடம் வெளியீட்டு நிகழ்விலே தென்மராட்சிக் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு.அ.அகிலதாஸ் அவர்கள் கலந்து கொண்டு தடம் செய்தியேட்டை வெளியிட்டு வைத்து உரையாற்றினார். மேலம் சிறப்புற அமைவதற்கான ஆலோசனைகளையும் கூறினார்.

## தமிழ் மொழித்தினம் - 2013

இவ்வருடத்திற்கான தமிழ் மொழித்தினப் போட்டிகள் பாடசாலை மட்டத்தில் 28.02.2013 இற்கு முன்னர் நடைபெறும்.

## தரம் 6 அனுமதி


ஆறாந்தரத்தில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான செயற்பாடு 28.12.2012 சனிக்கிழமை யானது நடைபெற்றது.

## தவணைப் பரீட்சை


இரண்டாந்தவணைப் பரீட்சைகள் வலய நிலையில் நடத்தப்பட்டு, விடைத்தாள்கள் மதிப்பிடப்பட்டு, புள்ளிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. வழமை போல இத்தவணையும் 06.12.2012 அன்று பெற்றோர் ஆசிரியர் சந்திப்பு இடம்பெற்றது. மாணவர் கல்வி முன்னேற்றம் பற்றிக் கலந்துரையாடப்பட்டது.

பாராட்டி வாழ்த்துகின்றோம்


எமது கல்லூரி ஆசிரியர்கள் நால்வர் யாழ். பல்கலைக்கழக கலை முதுமாணி (தமிழ்)ப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.




திருமதி.வி.மகேந்திரன்



திருமதி.மீ.பாரதி



திரு.கு.ஜோதிரட்ணராஜா



திருமதி.பு.சிறிஸ்கந்தராஜா



எமது கல்லூரி ஆசிரியர் திரு.மு.அசோக்குமார் அவர்கள் கல்வி முதுமாணிப் பரீட்சையில் சித்தி பெற்றுள்ளார். இவ் ஆசிரியர்களைப் பாராட்டுகின்றோம். மேலும் உயர்வுகள் பெற வாழ்த்துகின்றோம்.

### புதிதாக இணைந்து கொண்ட ஆசிரியர்



திரு.எஸ்.தினேஸ்குமார் (விசேட கல்வி) இந்துவின் வளர்ச்சியில் இவரது அர்ப்பணிப்பான பணியின் பங்கு சிறந்து விளங்க வேண்டுமென வாழ்த்தி வரவேற்கின்றோம்.

### அரச ஊழியர்க்கான ஆக்கத்திறன் போட்டித் தொடர் - 2012

அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட அரச ஊழியர்க்கான ஆக்கத்திறன் போட்டியில் எமது கல்லூரி ஆசிரியை திருமதி.வி.மகேந்திரன், சித்திரம், பாடலாக்கம் ஆகிய போட்டிகளில் நான்காமிடத்தைப் பெற்றுள்ளார். கடந்த 21.12.2012 அன்று கொழும்பு தேசிய அரும்பொருட்காட்சியக கேட்போர் கூடத்தில் கலை கலாசார அமைச்சினால் நடத்தப்பட்ட விழாவில் இவருக்கான சான்றிதழும், பரிசிலும் வழங்கப்பட்டது.

### புத்தகக் கொள்வனவு

கல்வி அமைச்சினால் நூலகத்திற்கான புத்தகக் கொள்வனவுக்காக ரூபா 65,000 வழங்கப்பட்டு புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

### A9 வீதி அகலிப்பும் மதில் அமைத்தலும்

A9 வீதி அகலிப்புக் காரணமாக எமது கல்லூரியின் 900 அடி நீளத்திற்கு 6 அடி அகலமான காணி இழக்கப்பட்டுள்ளது. 900 அடி நீளமதில் இடித்து அகற்றித் திரும்ப அமைப்பதற்கும் அகற்றப்பட்ட நான்கு துவிச்சக்கர வண்டித் தரிப்பிடங்கள் அமைப்பதற்கும் 3.2 மில்லியன் பணம் பா டசாலை அபிவிருத்திச் சங்கத்துக்கு வழங்கப்பட்டது. பாடசாலை அபிவிருத்திச் சங்கம் முழுமையான மதிலையும் மிகவும் அழகுற அமைத்துள்ளதோடு ஐந்து துவிச்சக்கர வண்டித் தரிப்பிடங்களையும், வீதி ஓரங்களில் இருந்த வகுப்பறைக் கட்டிடங்களின் சில பகுதிகள் இடித்துச் சீராக்கியும் சிறப்பான முறையில் இச் செயற்பாடுகளைப் பூர்த்தி செய்துள்ளது.

### வகுப்பறைத் திருத்தம்

மிக நீண்டகாலமாக மோசமான நிலையில் பாதிக்கப்பட்டிருந்த I மண்டபம், க.பொ.த (உ/த) கலைப்பிரிவு மாணவர்களின் சீரான கற்றலுக்காக பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தால் ரூபா மூன்றரை இலட்சம் செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது.

### பிரதான மண்டபம் விஸ்தரிப்பு

எமது பிரதான மண்டபம், பிரான்ஸ் நாட்டின் பழைய மாணவர் சங்கத்தினரால் சுமார் 5 லட்சம் ரூபா செலவில் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. 80' x 19' அளவான கொட்டகை அமைக்கப்பட்டு மாணவர்க்கு போதுமான இடவசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

தடம் செய்தி ஏட்டினூடாக இப்பணிகளை நன்றியுடன் பாராட்டுகின்றோம்.

### வலுச் சங்கம் (Energyclub)

எமது கல்லூரியில் வலுச்சங்கமானது இவ்வருடம் மிகவும் முனைப்புடன் தனது செயற்பாடு களை முன்னெடுத்து வருகின்றது. முக்கியமாக மின்சக்தியைச் சேமித்தல் என்ற கருப்பொருளில் பல்வேறுபட்ட செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்து கின்றது. அந்த வகையில் எமது கல்லூரி மாணவர் களிடையே சித்திர பாட ஆசிரியர்களின் உதவியுடன் ஓவியப் போட்டியொன்று நடத்தப்பட்டது. வெற்றியீட்டிய மாணவர்களுக்கு சான்றிதழும், வழங்கப்பட்டது.

#### வெற்றியீட்டிய மாணவர் விபரம்

| | | |
|---|---|---|
| பிரிவு I | | |
| 1ஆம் இடம் | வி.கீர்த்திகன் | 7A |
| 2ஆம் இடம் | வி.மேனன் | 7C |
| 3 ஆம் இடம் | சி.நேசகுமார் | |
| பிரிவு II | | |
| 1ஆம் இடம் | ஆ.சாருபன் | 8A |
| 2ஆம் இடம் | தி.பதுஸ்ஸன் | 9A |
| 3ஆம் இடம் | சி.சகிலன் | 8A |
| பிரிவு III | | |
| 1ஆம் இடம் | அ.சோபிகன் | 10C |
| 2ஆம் இடம் | ஆ.கஜானந் | 10A |
| 3ஆம் இடம் | சி.சிவஜன் | 10A |
| பிரிவு IV | | |
| 1ஆம் இடம் | இ.எழில்வேந்தன் | 12A3 |
| 2ஆம் இடம் | யோ.நிசாந்தன் | 12A3 |
| 3ஆம் இடம் | வி.நயனன் | 12A3 |

வெற்றியீட்டிய மாணவர்களைப் பாராட்டுகின்றோம். மேலும் இச்சங்கத்தைச் சிறப்புறச் செயற்படுத்தும் பொறுப்பாசிரியர் திரு.எஸ்.ஞானரதன் அவர்களையும், இக்குழுவின் தலைவர் பொ.கஸ்ரோ, செயலாளர் யோ.விதுஷென், பொருளாளர் நா விதுசன் ஆகியோரை யும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

### வழிகாட்டலும் ஆலோசனையும் சேவை

எமது கல்லூரி வழிகாட்டலும் ஆலோசனையும் பொறுப்பாசிரியர் திரு.க.உதயசந்தர் அவர்களினதும், சித்திரப் பாட பொறுப்பாசிரியர் திரு.ஆ.வைகுந்தனினதும் நெறிப்படுத்தலில் உலக உளநல நாளை முன்னிட்டு

மாணவர்களிடையே ஓவியப் போட்டிகள் நடத்தப் பட்டன. இப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்க்கான சான்றிழ்களும் ஒக்டோபர் 10ஆந் திகதியன்று வழங்கப்பட்டன. இவ்ஓவியங்கள் வலய மட்ட உலக உளநல நாள் நிகழ்விலும் மாகாண மட்ட உலக உள நலநாள் நிகழ்விலும் காட்சிக்கு வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். 2013 இன் மகிழச்சி நாள் இம்முறை உலக உளநல நாளைாகவே நிகழ்த்தப் பட்டது.

மாணவர் உளநலம் போணும் உயரிய பணியை எமது கல்லூரி வழிகாட்டலும் ஆலோசனையும் பிரிவு மிகச் சிறப்புற ஆற்றி வருகின்றமையைத் தடம் செய்தி ஏட்டினூடாகப் பாராட்டுகின்றோம்.

நீ வாழ்க்கையில் முன்னேற வேண்டுமானால் உன்னுடைய கால்களால் நடந்து போ, மற்றவர்களின் முதுகின் மேல் ஏறிப் போக விரும்பாதே, அது உனக்கு ஆபத்து.

## District Level English Day Competition 2012

The District level English day competition was held in August 2012. The following students have been selected at the district level competition.

1.M as. Kalanithy Achchuthan
Dictation - Third place Gr.8
2.M s.Ravikkumar Vigani
Dictation - Second Place Gr.9
3.M as. Sivaanbu Ajanthan
Copy writing - Third Place Gr.6
4.M as.Sivasundaralingam Danujan
Copy writing - Third Place Gr.7

## Provincial level English day Competition-2012


The provincial level English day Competition was held in September 2012 in our school. Students from various districts participated in this competition. In this competition Ms.Ravikkumar Vigani from grade 9 won the third place in Dictation.

## English Day 2012



This year also we celebrated our English Day in October 2012. Mr.V.Paranthaman (Lecturer-University of Jaffna) was the Chief guest and Mrs.C.A.Thirukumar( ADE- English Thenmaradchi Zonal Education Dept.) was the special guest. Ms.T.Pirakas (President – English Union) Presided over the meeting. Mr.K.Jeyaveerasingam (Teacher of English) and the president delivered the welcome address. Principal also mentioned about the students' performance in his address. Many programmes were conducted by the students like drama, songs, recitation and storytelling.

The programme started with thevaram. Then the lightening of the traditional oil lamp took place. Mr.V.Paranthaman an old student of our school in his address mentioned about his past experiences. He also congratulated the students who won the




places in the school level, Zonal level and district level competitions. Mrs.C.A.Thirukumar in her address she thanked the teachers who coached the students for the English Day competitions and also congratulated the students who won the places. Then variety entertainment took place. The function ended with the vote of thanks by the secretary – Ms.M.Tharani.

# நிறுவுநர் நாள் - 2013

தாமோதரன் 109 ஆவது ஆண்டு மலர் வெளியீடும், நிறுவுநர் நினைவுப் பேருரையும், நிறுவுநர் அமரர்.வி.தாமோதரம்பிள்ளை அவர்களின் திருவுருவச் சிலை திரை நீக்கமும் இடம்பெறும் எமது கல்லூரி சித்திர பாட ஆசிரியர் திரு.செ.செல்வரமணன் அவர்களின் பெருமுயற்சியினால் உருவாக்கப்பட்ட நிறுவுநர் திருவுருவச் சிலை எமது கல்லூரியில் நிறுவப்படுவது முக்கியமான ஒரு வரலாற்றுத் தடமாகும்.



## எமது நோக்கு



வகுப்பறைதான் மாணவனை சமுதாயத்துக்கு உரியவனாக, சிறந்த பிரஜையாக ஆக்குவதற்குரிய பொருத்தமான களமாகும்.வகுப்பறையில் மாணவர்களின் கட்டுப்பாடு சீர்குலையும் போது கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் பாதிப்புக்குள்ளாகின்றன. வகுப்பறையின் சமூகச் சூழல் கற்றலில் பெரும் பங்கு வகிக்கின்றது. வகுப்பறைச் சூழல் சாதகமாக இருக்கும் போது கற்கும் விடய அளவிலும் கற்றலின் தரத்திலும் மாற்றம் ஏற்படுகின்றது. வகுப்பறையில் ஆசிரியர் மாணவர் உறவு சிறந்த முறையில் பேணப்படுதல் முக்கியமானது வினைத்திறனுடைய ஆசிரியர், மாணவரின் தேவைகளைக் கவனிப்பவராகவும், மாணவர்கள் பிரச்சினைக்குள்ளாகும் போது அவர்களை நன்கு புரிந்து கொண்டு செயற்படுபவராகவும் விளங்குதல் வேண்டும். மாணவப் பருவத்தில் உள்ளவர்கள் நீதி நியாயத்தை மதிப்பவர்கள், பேணுபவர்கள், எதிர்பார்ப்பவர்கள் தமது ஆசிரியர் வகுப்பறையிலே நியாயமாக நடந்து கொள்ள வேண்டும் என்றும் எதிர்பார்ப்பவர்கள். எனவே மாணவரின் உள்ளத்தைப் புரிந்து தேவை அறிந்து உதவுபவர்களே சிறந்த ஆசிரியராவர்.

இன்று மாணவர்களின் ஒழுக்கம் கட்டுப்பாடு குறைந்து செல்வதற்கு ஆசிரியர்களே முக்கியமான பொறுப்புக் கூற வேண்டியவர்கள் என்பதை நன்கு உணர்தல் வேண்டும் ஆசிரியர் பேசுகின்ற முறை, அவருடைய உடை, தோற்றம், மெய்ப்பாட்டசைவுகள், நடுவு நிலையுடன் செயற்படுதல், மகிழ்ச்சிகரமாகப் பேசுதல் என்பன தொடர்பில் ஆசிரியர்கள் தம்மைத்தாமே சுயமதிப்பீடு செய்து கொள்ள வேண்டும். நேரந்தவறாது வகுப்பறைக்குச் செல்லும் ஆசிரியர்கள், மாணவரை நன்கு அறிந்த ஆசிரியர்கள், பாடங்களைத் திட்டமிட்டு மாணவனுக்கு ஏற்றவாறு கற்பிக்கும் ஆசிரியர்கள், பிள்ளைகளை மதிக்கின்ற ஆசிரியர்கள் பெரிதும் மதிக்கப்படுகின்றார்கள். இவர்களாலேயே வகுப்பறைக் கட்டப்பாட்டினைப் பேண முடியும்.

## வெளியீட்டுக்குழு

◆ வெளியீட்டாளர்:

திரு அ.கயிலாயபிள்ளை.(அதிபர்)
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி
(தேசிய பாடசாலை)



ஆலோசனை:

திரு ந. பாலச்சந்திரன்
பிரதி அதிபர்



திருமதி செ.செல்வராஜா
பிரதி அதிபர்



திரு.த.பாலசண்முகநாதன்
உப அதிபர்



◆ பிரதம ஆசிரியர் :
திரு க.முத்துலிங்கம்



◆ ஆசிரியர்:
திருமதி வி.மகேந்திரன்
(தமிழ்)



திருமதி தே.கமலேஸ்வரன்
(ஆங்கிலம்)



◆ கணனி வடிவமைப்பு.
திரு. ஆ.வைகுந்தன்



◆ கணனிப்பதிவு:
திருமதி க.நளாயினி



அனுசரணை: ஆசிரிய சகோதரத்துவம் சாவகச்சேரி இந்துக்கல்லூரி

தடம்

TO, ..............................................
..............................................
..............................................

FROM , PRINCIPAL,
J/CHAVAKACHCHERI
HINDU COLLEGE
CHAVAKACHCHERI
Web.WWW.ChC.sch.lk